DINA MANI



...வுன் தங்கநகை, ரூ.12 லட்சம் ஆகிய ...

# 'நுகர்வோர் தேவை குறித்த ஆய்வுகள் அதிகரிக்க வேண்டும்'



சாய்ராம் பொறியியல் கல்லூரி வணிக மேலாண்துறை சார்பில் புதன்கிழமை நடைபெற்ற சர்வதேசக் கருத்தரங்கின் மலர் வெளியீட்டு விழாவில் (இடமிருந்து) துறை இயக்குநர் கே.மாறன், சாய்ராம் இன்ஸ்டிட்யூட் ஆப் டெக்னாலஜி முதல்வர் பழனிக்குமார், ராஜீவ் காந்தி இளைஞர் மேம்பாட்டு நிறுவன இயக்குநர் மதன் மோகன் கோயல், அன்மெட்ரிக் மார்க்கெட்டிங் இயக்குநர் பீட்டர் கிளாரிட்ஜ், கல்லூரி முதல்வர் சி.வி.ஜெயக்குமார்.

தாம்பரம், செப். 21: இந்தியாவில் அனைத்துத் தரப்பு நுகர்வோர்களின் தேவை, எதிர்பார்ப்பு குறித்த ஆய்வு நடவடிக்கைகள் அதிகரிக்க வேண்டும் என்று ஸ்ரீபெரும்புதூர் ராஜீவ்காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு நிறுவன இயக்குனர் மதன் மோகன் கோயல் கூறினார்.

மேற்கு தாம்பரம் சாய்ராம் பொறியியல் கல்லூரி வணிக மேலாண்துறை சார்பில் புதன்கிழமை நடைபெற்ற சர்வதேசக் கருத்தரங்கை தொடங்கி வைத்து அவர் மேலும் பேசியது:

வளர்ந்த நாடுகளில் வணிக நிறுவனங்கள் தங்களது தயாரிப்பு, விற்பனைக்கு வருவதற்கு முன்பாக அனைத்துத் தரப்பு நுகர்வோர்களின் தேவை, விருப்பம், எதிர்பார்ப்பை தெரிந்து கொள்வதில் அதிக அக்கறையும், சிரத்தையும் எடுத்துக் கொள்கின்றன. தங்களது தயாரிப்புகள் எந்தவகை நுகர்வோர்களை சென்றடைய வேண்டும் என்பதிலும் அதிக முனைப்புடன் செயல்படுகின்றன.

இந்தியாவில் பெரும்பாலான வணிக,தொழில் நிறுவனங்கள் தங்கள் தயாரிப்புகளுக்கு ஏற்ற வாடிக்கையாளர்களைப் பெறுவதிலும்,பின்னர் அவர்களைத் தக்க வைத்துக் கொள்வதற்கும் பெரும் முயற்சிகளை மேற்கொள்கின்றன. இதனால் விற்பனையில் எதிர்பார்க்கும் பலனைப் பெறமுடியாமல் சிரமத்தை எதிர்கொள்கின்றன.

சந்தையில் தேக்கமடைந்த நிலையில், போட்டி நிறுவனங்கள் நுகர்வோர்களை தங்கள் பக்கம் ஈர்க்கும் முயற்சியை மேற்கொள்கின்றன. இதனால் நுகர்வோர் அதிக பயனையும், பெரும்பாலான பொருள் தயாரிப்பு நிறுவனங்கள் குறைந்த லாபத்தையும் பெறும் நிலை ஏற்படுகிறது. சில நிறுவனங்கள் பெரும் சரிவை எதிர்நோக்குகின்றன.

நுகர்வோர் சந்தை குறித்த துல்லியமான,உண்மையான தகவல்களை பெற உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் உள்நாட்டில் மட்டுமல்லாமல்,இதர வெளிநாட்டுச் சந்தையிலும் வெற்றிகரமாகத் திகழ முடியும் என்றார் அவர்.

அமெரிக்கா அன்மெட்ரிக் விற்பனை பிரிவு இயக்குனர் பீட்டர் கிளாரிட்ஜ், சாய்ராம் பொறியியல் கல்லூரி முதல்வர் சி.வி.ஜெயக்குமார், வணிக மேலாண்துறை இயக்குனர் கே.மாறன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.